2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

டி.கே.ஜி. நீலமேகம், திரு. ம. பிரபாகரன், சென்னை பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. அ. வெற்றிஅழகன், திரு. வி.ஜி. இராஜேந்திரன், திரு. ஜோசப் சாமுவேல், திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. கோ. செந்தில்குமார், திருமதி கு. மரகதம் குமரவேல், அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, திரு. உதயநிதி ஸ்டாலின், (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, திரு. ம. சிந்தனை செல்வன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. தி. வேல்முருகன், தமிழ்நாடு ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. வி.பி. நாகைமாலி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. A.J. மணிக்கண்ணன் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் கல்விக் குழு, திரு. A.P. நந்தகுமார், திரு. க.சொ.க. கண்ணன்.

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலங்களாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அப்பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*